1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

**இ.ம.எண்.**1/2020 **இன் இ.ம.எண்.**390/2005 **இன்** அ.வ.எண். **228/2005**

**2021** வது ஆண்டு **செப்டம்பர்** மாதம **29**ம் நாள் P.W1ன் சாட்சிய வாக்கு மூலம் (**1969**ம் ஆண்டு **54**-வது விதியின் **9**-வது (பிரிவின் ஏற்பாட்டின்படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | திருமதி.செய்யது ராபியா | வட்டம் : | சென்னை |
| தந்தைபெயர்: | க/பெ.திரு.செய்யது அகமது | கிராமம் : | |
| வயது : | 64 | மதம் : | |

**29.09.2021 முதல் விசாரணை:** நான் மனுதாரர் ஆவேன். எனது தரப்பில் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்துள்ளேன். அதை படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன்.

(எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

**1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

**இ.ம.எண். 1/2020 இன் இ.ம.எண்.390/2005**

**இன் அ.வ.எண். 228/2005**

2022 வது ஆண்டு ஜூன் மாதம் 29 ம் நாள் P.W.1 ன் சாட்சிய வாக்கு மூலம் (1969 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது (பிரிவின் ஏற்பாட்டின்படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | திரு.செய்யது அகமது | வட்டம் : | திருநெல்வேலி |
| த/பெ : | திரு.அபுபக்கர் | கிராமம் : | |
| வயது : | 69 | மதம் : | |

இ.ம.எண்.2/2021 அனுமதிக்கப்பட்டதன் பெயரில் முந்தைய ம.சா.1 சாட்சியம் நீக்கரவு செய்யப்பட்டது.

**29.06.2022 முதல் விசாரணை :** நான் மனுதாரரின் அதிகாரம் பெற்ற முகவர் ஆவேன். எனது தரப்பில் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். அதை படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன்.

**1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

**இ.ம.எண். 1/2020 இன் இ.ம.எண்.390/2005**

**இன் அ.வ.எண். 228/2005**

05.07.2022 – ம.சா.1 திரு.செய்யது அகமது

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிர்மனுதாரர் என் மாமனார் மீது அ.வ.எண்.142/1988 திருநெல்வேலி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கு விசாரணைக்கு பிறகு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி உத்தரவை எதிர்த்து மாவட்ட நீதிமன்றத்தில் மே.வ.எண்.179/2000 தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த மேல்முறையீட்டு வழக்கு நிலுவையில் இருக்கும் சமயத்தில் எனது மாமனார் இறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி மேல்முறையீட்டில் எனது மாமியார் மற்றும் இந்த மனுவின் 2ம் எதிர்மனுதாரர் மற்றும் எனது மனைவி கட்சியாக சேர்க்கப்பட்டுள்ளனர் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டது. மேற்படி மேல்முறையீட்டு தீர்ப்பை எதிர்த்து எனது மாமியார், எனது மனைவி, 2ம் எதிர்மனுதாரர் மேல்முறையீடு செய்யவில்லை. எனது மாமியார் இறந்துவிட்டார். 1 ம் எதிர்மனுதாரர் முதல் நிலை தீர்ப்பாணையை அனுசரித்து இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்க கோரி இ.ம.எண்.390/2005 தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அழைப்பாணை சார்வு செய்யப்படவில்லை. தாவா சொத்து வீடும், மனையும் ஆகும். அந்த வீட்டில் அப்துல் சமது என்கிற எனது உறவினர் தற்சமயம் வரை அனுபவத்தில் இருந்து வருகிறார். இறுதிநிலை தீர்ப்பாணை மனுவில் வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்யப்பட்டு, அவர் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது. அப்துல் சமது என்பவர் தாவா வீட்டில் வசித்து வருவதை காட்டுவதற்கு ஆவணங்கள் நிறைய உள்ளது. மேற்படி ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் இந்த மனுவில் தாக்கல் செய்யவில்லை. 1ம் எதிர்மனுதாரர் இ.ம.எண்.390/2005

தாக்கல் செய்த எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் 2018 ம் ஆண்டு மார்ச் மாதம் தெரியவந்தது. எனது உறவினர் அப்துல் சமது மூலமாக தான் இறுதிநிலை தீர்ப்பாணை விபரம் தெரியவந்தது. அதன் பிறகு இறுதிநிலை தீர்ப்பாணை விபரத்தை எடுத்து பார்க்க எனக்கு 6 மாத காலங்கள் ஆனது. இறுதிநிலை தீர்ப்பாணையை அனுசரித்து நிறைவேற்று மனு 149/2007 தாக்கல் செய்து அதன் படி தபசில் சொத்து வாழ்விப்பு செய்து கொடுக்கப்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இறுதிநிலை தீர்ப்பாணை விபரம் தெரிந்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் இந்த மனு தாக்கல் செய்யவில்லை என்றால் தீர்ப்பாணை நகல் பெறுவதற்கு தாமதம் ஆகிவிட்டது. இறுதி நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட விபரம் தெரிந்த பிறகு சுமார் 2.1/2 வருடம் கழித்து இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த 2.1/2 வருட தாமதத்தின் போது நான் வழக்கு கோப்புகளை பார்ப்பதற்கோ, தீர்ப்பாணை பெறுவதற்கோ எடுத்த நடவடிக்கைகளை காட்டுவதற்கு ஆவணங்கள் ஏதும் இந்த மனுவில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பை அனுசரித்து, 1ம் எதிர்மனுதாரர் தனது மனைவி பாத்திமா பீவி என்பவருக்கு 2009 ம் ஆண்டு ஒரு நன்கொடை ஆவணம் எழுதி கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். காஜா கமாலுதீன் குமாரர் செய்யது அப்பாஸ் என்பவருக்கு 1ம் எதிர்மனுதாரின் மனைவி 20.01.2010 ல் ஒரு கிரைய பத்திரம் ஏற்படுத்தி கொடுத்தார் என்றால் சரிதான். தாவா சொத்தின் வில்லங்க சான்றிதழை நான் அவ்வப்போது பார்த்தேனா என்றால் இல்லை. இறுதி நிலை தீர்ப்பாணை விபரம் தெரிந்த பிறகு சமாதானம் பேச்சுவார்த்தை 1ம் எதிர்மனுதாரருடன் நடந்ததா என்றால் இல்லை. இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட விபரம் தெரிந்த பிறகு எனது மனைவிக்கு உடல்நிலை சரியில்லை என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். என் மனைவி நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க இயலும் என்றால் சரியல்ல. எனது மனைவி மனுவுடன் இணைந்த அபிடவிட்டில் கூறியுள்ள விலாசத்தில் வசித்து வருவதை

காட்டுவதற்கு ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த பாகப்பிரிவினை வழக்கில் எனது மனைவியின் விலாசமாக எது குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் 28, பெரியார் நகர், திருவெற்றியூர், சென்னை –19. நான் 2005ல் புதுவீடு கட்டி மனுதாரர் தற்சமயம் வசிக்கும் வீட்டிற்கு சென்றுவிட்டேன். முந்தைய பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்யப்பட்ட 1988ம் ஆண்டு 28, பெரியார் நகர், திருவெற்றியூர், சென்னை –19 என்ற விலாசத்தில் தான் என் மனைவி வசித்து வந்தார். எனக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் எத்தனை ஆண்டுகளாக பேச்சு வார்த்தை இல்லை என்றால் எனக்கு அவரை தெரியாது. நான் சென்னையில் வசித்துவந்தேன். அவர் ஈரோட்டில் வியாபாரம் செய்து வந்தார். நான் 2005ம் ஆண்டு வீடு மாறிய விபரம் 1ம் எதிர்மனுதாரருக்கு தெரிந்திருக்க வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். வழக் கதாக்கல் செய்யப்பட்ட சமயத்திலிருந்து இன்றைய தேதி வரை நான் 28, பெரியார் நகர், திருவெற்றியூர், சென்னை –19ல் தான் வசித்து வருகிறோம் என்றும், 2005ம் ஆண்டு புதிய வீட்டிற்கு குடி பெயரவில்லை என்றால் சரியல்ல. வழக்கு நடவடிக்கைகள் அனைத்தும் எனக்கு மார்ச் 2018க்கு முன்பே தெரியும் என்றும், நீதிமன்ற அழைப்பாணைகள் என் மனைவிக்கு முறையாக சார்வு செய்யப்பட்டது என்றும், இந்த மனுவிற்காக நீதிமன்ற அழைப்பாணை சார்வு செய்யப்படவில்லை என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. காலதாமதம் என கணக்கிடப்பட்ட நாட்கள் தவறு என்றால் சரியல்ல. காலதாமதத்தை மன்னிக்க நான் கோரும் காரணங்கள் அனைத்தும் தவறானது என்றால் சரியல்ல.எனது மனு செலவுத் தொகையுடன் தள்ளபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

**1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

**இ.ம.எண்.1/20 இன் இ.ம.எண்390/2005 இன் அ.வ.எண். 228/2005**

07.09.2022 – ம.சா.1 திரு.செய்யது அகமது

**மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி**

19.07.2004 தேதியிட்ட மனுதாரரின் சிடி ஸ்கேன் ரிப்போர்ட் ம.சா.ஆ.1 ஆகும். ராமசந்திர மருத்துவமனையின் மருத்துவரின் மருத்துவ குறிப்புகள் ம.சா.ஆ.2 ஆகும். 19.03.2007 தேதியிட்ட மியாட் மருத்துவமனையின் அறிக்கை ம.சா.ஆ 3 ஆகும். 25.09.2003 தேதியிட்ட கிரைய ஆவண எண்.5466/2003 ன் சான்றிட்ட நகல் ம.சா.ஆ 4 ஆகும். 22.07.2004 தேதியிட்ட சி.எம்.டி.ஏ கட்டுமான அனுமதி ம.சா.ஆ.5 ஆகும். 30.07.2004 தேதியிட்ட சி.எம்.டி.ஏ கட்டுமான அனுமதி ம.சா.ஆ 6 ஆகும். 30.07.2004 தேதியிட்ட சி.எம்.டி.ஏ கட்டுமான அனுமதி ரசீது ம.சா.ஆ.7 ஆகும். 27.08.2004 தேதியிட்ட போரூர் பஞ்சாயத்து வழங்கிய அனுமதி கடிதம் ம.சா.ஆ.8 ஆகும். 27–08.2004 தேதியிட்ட கட்டிட வரைபட அனுமதி ம.சா.ஆ.9 ஆகும். 03.03.2005 தேதியிட்ட கட்டிட காப்பீட்டு பாலிசி ம.சா.ஆ.10 ஆகும். புதுமனை புகுவிழா அழைப்பிதழ் ம.சா.ஆ.11 ஆகும். மனுதார் செய்யது ராபியா அவர்களின் ஆதார் அடையாள அட்டை ம.சா.ஆ.12 ஆகும். அது அசலுடன் சரிபார்க்கப்பட்டது. மனுதார் செய்யது ராபியா அவர்களின் வாக்காளர் அடையாள அட்டையின் நகல் ம.சா.ஆ.13 ஆகும். அது அசலுடன் சரிபார்க்கப்பட்டது. மனுதாரரின் பாஸ்போர்ட் நகல் ம.சா.ஆ.14 ஆகும். மனுதாரரின் குடும்ப அட்டையின் நகல் ம.சா.ஆ.15 ஆகும். எனவே மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

**இ.ம.எண்.1/20 இன் அ.வ.எண். 228/2005**

12.10.2022 – ம.சா.1 திரு.செய்யது அகம்மது

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு 3 வாரிசுகள். முதல் பெண்ணிற்கு 1996ம் ஆண்டு திருமணம் நடந்தது. 2வது பெண்ணிற்கு 1997ல், 3ம் மகனிற்கு எப்போது திருமணம் நடத்தி வைத்தேன் என்று நினைவில்லை. எனக்கு திருநெல்வேலி மேலச்செவல் தான் பூர்வீக ஊர் என்றால் சரிதான். மேலச்செவலில் எனது உறவினர்கள் இன்று வரை வசிக்கிறார்கள் என்றால் சரிதான். மேலச்செவல் உறவினர் வீடுகளுக்கு சுக, துக்க நிகழ்வுகளுக்கு நான் வந்து செல்வேன் என்றால் முக்கியமான நிகழ்விற்கு நான் வருவேன்.
2. திருநெல்வேலி பேட்டையிலும் எனக்கு உறவினர்கள் உள்ளனர். அந்த உறவினர்களின் குடும்ப விசேசத்திற்கு வந்து செல்வேன் என்றால் சரிதான். அவ்வாறு நான் திருநெல்வேலி உறவினர் வீடுகளுக்கு வந்து செல்லும் போது, என் மனைவியும் உடன் வருவார் என்றால் சரிதான்.
3. 1990 முதல் நாளது தேதி வரை நானும் எனது மனைவியும் முக்கியமான நிகழ்விற்கு திருநெல்வேலி வந்து செல்வோம். கடைசியாக நீதிமன்ற வேலை காரணமாக நாங்க்ள இருவரும் திருநெல்வேலி வந்து சென்றோம். அதனால் என் மனைவிக்கு திருநெல்வேலிக்கு பயணம் செல்லும் அளவிற்கு உடல்நிலை நன்கு உள்ளது என்றால் சரியல்ல.
4. ம.சா.ஆ.1 ஆனது 2004ல் எடுக்கப்பட்ட ஸ்கேன் அறிக்கை என்றால் சரிதான். ம.சா.ஆ.2 ஆனது மருத்துவர் எழுதிகொடுத்துள்ள மருத்துவ குறிப்புகள். ம.சா.ஆ.3ல் எந்த எந்த மருத்துவர்களை சந்திக்க வேண்டும் என எழுதப்பட்டுள்ளது. ம.சா.ஆ.1 முதல் 3 காலகட்டத்தில் நானும், எனது மனைவியும் திருநெல்வேலியில் நடைபெற்ற முக்கியமான உறவினர் நிகழ்ச்சியில் பங்கு எடுத்தோம் என்றால் சரிதான்.
5. ம.சா.ஆ.4 கிரைய ஆவணத்தின் விபரம் 1ம் எதிர்மனுதாரருக்கு தெரியுமா

என்றால் தெரியாது. கடித போக்குவரத்து குறித்து ம.சா.ஆ.5 முதல் 15 வரையான ஆவணங்கள் எனக்கு அனுப்பப்பட்ட கடிதங்கள் என்றால் சரிதான். அந்த ஆவணங்கள் எனது தனிப்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். அந்த ஆவணங்களின் விபரம் 1ம் எதிர்மனுதாரருக்கு தெரியாது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.1 முதல் 15 ஆவணங்கள் மூலம் காலதாமதத்தை மன்னிக்க முடியாது என்றால் சரியல்ல.

**1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

**இ.ம.எண். 1/20 இன் அ.வ.எண். 228/2005**

2022வது ஆண்டு நவம்பர் மாதம் 11ம் நாள் P.W.2 ன் சாட்சிய வாக்கு மூலம் (1969ம் ஆண்டு 54வது விதியின் 9வது (பிரிவின் ஏற்பாட்டின்படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | திரு.பரிதம்மாள் பீவி | வட்டம் : | பாளையங்கோட்டை |
| க/பெ : | திரு.முகம்மது நவாஸ் | கிராமம் : | |
| வயது : | 38 | மதம் : | |

**11.11.2022 முதல் விசாரணை:** நான் மனுதாரர் தரப்பு 2ம் சாட்சி ஆவேன். எனது தரப்பில் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். அதை படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன்.

(பிரிவு 33 இந்திய சாட்சிய சட்டத்திற்கு உட்பட்டு குறுக்கு விசாரணை பிரதிவாதியின் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது)

**1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

**இ.ம.எண்.1/20 இன் இ.ம.எண்.390/2005 இன்**

**அ.வ.எண்.228 /2005**

25.11.2022 –ம.சா.2 திருமதி.பரிதாம்மாள்பீவி

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் 21 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறேன். அதற்கு முன்பு பர்கிட் மாநகரம் அருகே உள்ள புதுமனையில் வசித்து வருகிறேன்.
2. எனக்கு சொத்து பேட்டையில் ஏதும் இல்லை. எனக்கு 2000ம் ஆண்டு திருமணம் நடந்தது. எனது கணவர் அவர் அண்ணன் உடைய நாகர்கோயில் உள்ள கடையில் வேலை செய்கிறார். சென்னையில் தொழில் ஏதும் கிடையாது என்றால் எனது அண்ணன் மற்றும் சகோதரர் வசிக்கிறார்.
3. 2005ல் எனது வயது 20 என்றால் சரிதான். அந்த காலகட்டத்தில் திருமணம் முடிந்து நான் பாளையங்கோட்டையில் வசித்து வந்தேன். 2005ல் நான் சென்னைக்கு சென்றுள்ளேன். மனுதாரரின் புதுமனை புகுவிழா நிகழ்ச்சிக்கு சென்றேன்.
4. எனக்கு வருசை முகைதீனை தெரியாது. சென்னை திருவெற்றியூரில் மனுதாரர் வசித்ததாக கூறப்படும் வீடு வாடகை வீடா அல்லது சொந்த வீடா என்றால் வாடகை வீடு. தாவா நடக்கும் சொத்து விபரம் தெரியுமா என்றால் தெரியும். நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன்.
5. கதவு எண்.97 மற்றும் 97ஏ–ல் வசிப்பது அப்துல் சமத். அப்துல் சமத்திற்கும் சொத்திற்கும் என்ன தொடர்பு என்றால் உரிமையாளர். அப்துல் சமத்தின் 3 பெண்மக்களுக்கு கதவு எண்.97 மற்றும் 97ஏ விலாசமிட்டு ஆதார் அடையாள அட்டை போன்ற ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன்.
6. அப்துல் சமத் எனக்கு என்ன உறவு என்றால் எனக்கு பெரியம்மா. கதவு

எண்.97 மற்றும் 97 ஏ–ஐ நான் கடைசியாக எப்போது பார்த்தேன் என்றால் 15 நாட்களுக்கு முன்பு சென்று பார்த்தேன். தாவா வீட்டில் அப்துல் சமத் குடியிருந்து வருவதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7. மனுதாரர் 2005 ம் ஆண்டு போரூர் வீட்டிற்கு மாற்றி சென்றதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரர் எனது நெருங்கிய உறவினர் என்பதால் அவருக்கு சாதகமாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.